### கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் - இன்று

# விருதுநகரில் வரலாறு படைக்கும் - கழக இளைஞர் அணி தென் மண்டல நிர்வாகிகள் சந்திப்பு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

**விருதுநகர், பிப். 7 -**

**கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று விருதுநகரில் வரலாறு படைக்கும் கழக இளைஞர் அணி தென் மண்டல நிர்வாகிகள் சந்திப்பு நடைபெறுகிறது. இதில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.**

இதுபற்றிய விவரம் வருமாறு:-

கடந்த 14.12.2025 அன்று திருவண்ணாமலை, கலைஞர் திடலில், 28 கழக மாவட்டங்களுக்கு உட்பட்ட 91 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் முதல் பாகம் வரை, வாக்குச்சாவடி அளவிலான இளைஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் என ஒரு இலட்சத்து 30 ஆயிரம் இளைஞர் அணி நிர்வாகிகள் வெண் சீருடை அணிந்து, “பார் சிறுத்ததோ, படை பெருத்ததோ” என்று சொல்லத்தக்க வகையில், அகிலமே வியக்கும் வண்ணம் மாபெரும் எழுச்சியோடு “தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு” வெற்றிகரமாக நடை பெற்றதைத் தொடர்ந்து;

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட - கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில்;

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, திருமதி கனிமொழி கருணாநிதி எம்.பி., திருச்சி சிவா எம்.பி., ஆ.இராசா எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., மு.பெ.சாமிநாதன், விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா.இளையராஜா (தலைவர் - தாட்கோ,) ப.அப்துல்மாலிக், கே.இ.பிரகாஷ் எம்.பி., க.பிரபு, பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலையில் - விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் வரவேற்பில்;

இன்று (07.02.2026 - சனிக்கிழமை), மாலை 4.00 மணி அளவில், விருதுநகர், ‘கலைஞர் திடலில் “தென் மண்டல தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு” நடைபெறுகிறது.

இதில், தென்மண்டலத்தைச் சேர்ந்த கழக மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், கிளை மற்றும் வாக்குச்சாவடி அளவிலான இளைஞர் அணி நிர்வாகிகள் வெண்சீருடை அணிந்து வரலாறு படைத்திட, அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து இளைஞர் அணி நிர்வாகிகளை “தென்மண்டல நிர்வாகிகள் சந்திப்பிற்கு” அழைத்து வரும் பொறுப்பினை மேற்கொண்டுள்ளனர்.

வரலாறு படைக்கப் போகும் இந்த “தி.மு.க. இளைஞர் அணி தென்மண்டல நிர்வாகிகள் சந்திப்பில்” அமைச்சர் பெருமக்களான கே.ஆர்.பெரியகருப்பன், பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், அர.சக்கரபாணி, பி.மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், த.மனோதங்கராஜ்;

மாவட்டச் செயலாளர்கள்/பொறுப்பாளர்களான இரா.ஆவுடையப்பன், இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ., கோ.தளபதி எம்.எல்.ஏ., நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., மு.மணிமாறன், மேயர் ரெ.மகேஷ், ஈ.ராஜா எம்.எல்.ஏ., வே.ஜெயபாலன், ம.கிரகாம்பெல் ;

மாநகரச் செயலாளர்களான எஸ்.ஆர்.ஆனந்தசேகரன், எஸ்.ஏ.உதயசூரியன், பரமணி ஆனந்த், ஏ.எல்.பி.தினேஷ், சு.சுப்பிரமணியன், எஸ்.ராஜப்பா;

தென்மண்டல இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்களான ம.கணேசன், தனுஷ் எம்.குமார், இரா.கிருஷ்ணகுமார், எ.எஸ்.ஹரிஹரசுதன், சி.எம்.மதியழகன், நாகனி பா.செந்தில்குமார், பா.வில்சன் மணிதுரை, பை.மு.ராமஜெயம், கே.சம்பத்ராஜா, எம்.எஸ்.செல்வம், அ.ஆஜிப்கான், வி.விமல், டி.ஆர்.கிருஷ்ணராஜா, டி.எம்.எஸ்.முகேஷ், வி.அகஸ்தீசன், டி.ஜெகநாதன், ஜெ.ஜான்ரபீந்தர், ஏ.ஆர்.சௌந்தர்ராஜன், மு.இளங்கோ; மாநகர அமைப்பாளர்களான கே.கே.கருப்பசாமி, கோட்டையப்பன், அ.அப்துல் ரஹ்மான், எஸ்.அருண் சுந்தர், சி.டி.சுரேஷ், த.முத்துசெல்வம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா நன்றியுரையாற்றுகிறார்.

---

### மக்களவை தொடங்கிய சில நிமிடங்களிலேயே – நாள் முழுவதும் ஒத்திவைப்பு

# தொடர்ந்து 5வது நாளாக முடங்கியது நாடாளுமன்றம்!

## அவையின் மைய பகுதிக்குச் சென்று எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டம்!

## மாநிலங்களவையிலும் ஒன்றிய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் முழக்கம்!

*புதுடெல்லி, பிப். 7 -*

*சீன ஆக்கிரமிப்பு மற்றும் அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக விவாதம் நடத்த அனுமதிக்கக் கோரி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை தொடங்கிய சில நிமிடங்களிலேயே நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது.*

*சீன ஆக்கிரமிப்பு மற்றும் அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் குறித்த விவகாரம் நாடாளுமன்றத்தில் நேற்றும் எதிரொலித்தது. மக்களவையில் இந்த இரு விவகாரங்கள் தொடர்பாக விவாதம் நடத்த அனுமதிக்க வேண்டும் என சபாநாயகரிடம் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர்.*

*ஆனால், விவாதம் நடத்த அனுமதிக்க முடியாது என சபாநாயகர் பிடிவாதமாக தெரிவித்து விட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.*

*மேலும், பதாகைகளை ஏந்தி அவையின் மைய பகுதிக்குச் சென்று போராட்டத்திலும் ஈடுபட்டனர். இதனால் அவையில் கடும் அமளி நிலவியது.*

*இதனையடுத்து, மக்களவை தொடங்கிய சில நிமிடங்களிலேயே நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் மீண்டும் அவை கூடியபோதும் அமளி நீடித்ததால் மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.*

**மாநிலங்களவை**

*இதேபோல், சீன ஆக்கிரமிப்பு மற்றும் அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்த விவகாரம் மாநிலங்களவையிலும் எதிரொலித்தது. இந்த இரு விவகாரங்கள் தொடர்பாக விவாதம் நடத்த அனுமதிக்க முடியாது என மாநிலங்களவை தலைவர் தெரிவித்ததால், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.*

---

### மகாத்மா காந்தி பெயரை மாற்றியதற்கு எதிர்ப்பு!

# ‘வி பி ஜி ராம் ஜி’ சட்டத்தை திரும்பப் பெற வேண்டும்!

## ஒன்றிய அரசை வலியுறுத்தி – கேரள சட்டப்பேரவையில் தீர்மானம்!

*திருவனந்தபுரம், பிப். 7 -*

*மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு மாற்றாக ஒன்றிய அரசு நிறைவேற்றிய ‘வி பி ஜி ராம் ஜி’ சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி கேரள சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*கேரள உள்ளாட்சித் துறை அமைச்சர் எம்.பி.ராஜேஷ், ‘வி பி ஜி ராம் ஜி’ சட்டத்தை திரும்பப் பெறக் கோரும் தீர்மானத்தை சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார்.*

*100 நாள் வேலைத் திட்டத்துக்கான நிதி முழுவதையும் ஒன்றிய அரசே வழங்கியதாகவும், ஆனால், ‘வி பி ஜி ராம் ஜி’ சட்டத்தின் கீழ் 40 சதவீதம் நிதியை மாநில அரசு அளிக்க வேண்டும் என்றும், இது மாநிலத்துக்கு நிதிச் சுமையை அதிகரிக்கும் என்றும் இத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*ஏற்கனவே அமலில் இருந்த 100 நாள் வேலைத் திட்டமே தொடர வேண்டும் அதில் வலியுறுத்தப்பட்டது.*

*இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதத்திக்கு பின் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*‘வி பி ஜி ராம் ஜி’ சட்டத்துக்கு எதிராக ஏற்கெனவே தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்களின் பேரவைகளில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.*

---

### 14 மாவட்டங்களில் – 55 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில்

# ரூ. 34 ஆயிரம் கோடி மதிப்பில் - பல்வேறு தொழில் திட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல்!

## செய்தியாளர் பேட்டியில் – தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

**சென்னை, பிப். 7 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (5.2.2026) சென்னை, தலைமைச் செயலகத்தில், நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் “சென்னை, செங்கல்பட்டு உள்பட 14 மாவட்டங்களில் 55 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் வகையில், ரூ.34 ஆயிரம் கோடி மதிப்பில் பல்வேறு தொழில் திட்டங்கள் தொடங்கிட ஒப்புதல் தரப்பட்டது” என்று தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது குறிப்பிட்டார்.**

அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இன்றைய அமைச்சரவையில், ஏறத்தாழ 15 முதலீட்டு திட்டங்களுக்கு முதலமைச்சர் திராவிட நாயகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பாக ஒட்டுமொத்தமாக 34,237.39 கோடி ரூபாய்க்கான முதலீடு, 55,096 நபர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாகக் கூடிய ஒரு அற்புதமான பல திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியிருக்கிறது நமது அமைச்சரவை.

இத்திட்டங்கள் மாநிலத்தின் பரவலான வளர்ச்சிக்கு உறுதி செய்யும் விதமாகவும், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர்,



திருச்சிராப்பள்ளி, கரூர், திருப்பூர், ராமநாதபுரம், தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில் அமைக்கப்பட உள்ளன.

இதில் மிக முக்கியமான ஒரு திட்டம் வருகின்ற 13-ஆம் தேதி அதற்கான அறிவிப்பு வெளிவரும். 12-ஆம் தேதி உங்களுக்கு நன்றாக தெரியும் - கன்வெர்ஷன் கான்க்ளேவ். இதுவரைக்கும் எந்த அரசாங்கமும் நடத்தாத ஒரு கன்வெர்ஷன் கான்க்ளேவ் நடத்த இருக்கிறோம். அன்றும் பல அறிவிப்புகள் வரவிருக்கின்றன.

குறிப்பாக, இதில் கெயின்ஸ் சர்க்யூட் லிமிடெட் என்னும் மின்னணுவியல் நிறுவனம், அதாவது பிரிண்டட் சர்க்யூட் போர்ட்ஸ், பிசிபிஸ், கேமரா மாடியூல்ஸ், லேமினேட்ஸ் இதையெல்லாம் செய்கின்ற கேமரா மாடியூல்ஸ் எல்லாம் இப்போது மிகவும் முக்கியமான தேவை. மேம்பட்ட உற்பத்தி.

அடுத்து, ஜான்சன் எலெக்ட்ரிக் - வாகன மின்னணு உபபாகங்கள், ஆக்சுவேட்டர்ஸ், பிஎல்டிசி மோட்டார்ஸ், பவர் கூலிங் மோட்டார்ஸ் இதையெல்லாம் உற்பத்தி செய்கின்ற ஒரு நிறுவனம்.

எவர்வேன் கோத்தாரி ஃபுட்வேர் - இவர்கள் ஏறத்தாழ 25,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க உள்ளார்கள். அடுத்ததாக, தமிழ்நாட்டிற்கு அதிதாஸ் பிராண்டை கொண்டு வர இருக்கிறோம்.

சென்னை ராதா இன்ஜினியரிங் - இதுவும் மிகவும் முக்கியமான ஒரு இன்வெஸ்ட்மென்ட். ஷிப் பில்டிங்கில் உங்களுக்கே நன்றாக தெரியும். ப்ளூ எக்னாமி அடுத்த கட்டத்திற்கு கொண்டு சேர்க்க வேண்டும். தமிழ்நாட்டின் முழுமையான கோர்ஸ் நல்லபடியாக உபயோகப்படுத்த வேண்டும். அங்கே இருக்கின்ற நம்முடைய மீனவ நண்பர்களுக்கு மிகப்பெரிய ஒரு வாழ்வாதாரத்தை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஷிப் பில்டிங்கில் ஒரு பெரிய முன்னெடுப்பு நடந்து கொண்டிருக்கிறது. அந்த விதத்தில் நம்முடைய சென்னை ராதா இன்ஜினியரிங் ஷிப் ஹல்ஸ் செய்கின்ற ஒரு திட்டத்தில் அவர்கள் இறங்கி இருக்கிறார்கள். அதற்கான ஒப்புதலும் இன்று கிடைத்திருக்கிறது.

அதேபோல, ஜோனஸ் என்ற ஒரு ஏரோஸ்பேஸ் அண்ட் டிபன்ஸில் (A&D) ரெடார், ரெடார் சிஸ்டம், ஆர்டிலரி ஷெல்ஸ், மிசைல் சப் சிஸ்டம்ஸ் இதையெல்லாம் செய்யப் போகிறார்கள். இது ஒரு மிகப்பெரிய ஒரு முன்னெடுப்பு. அதற்கான ஒப்புதலும் இன்று கிடைத்திருக்கிறது.

யசாக்கி இந்தியா பிரைவேட் லிமிடெட் - வாகன உபபாகங்கள், வயரிங் ஹார்னஸ், பஸ் ஸ்பார்ஸ் இதெல்லாம் செய்கின்ற நிறுவனம்.

அதையடுத்து, ஹூண்டாய் ஏற்கனவே இருக்கின்ற சில நிறுவனங்களுக்கான அந்த விரிவாக்கத்திற்காகவும் (expansions) நாங்கள் இன்றைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஜெட்சால் எனும் ஒரு நிறுவனம் - அவர்கள் சோலார் செல் உற்பத்தி செய்வதற்கு தூத்துக்குடிக்கு வந்திருக்கிறார்கள்.

எனவே, தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட வளர்ச்சியை தொடர்ந்து உறுதி செய்யப்பட்டு, இந்தியாவின் நம்பர்-1 மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை தொடர்ந்து உறுதி செய்யும் இந்த வேலையை திராவிட நாயகன் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார். அந்த வகையில், தொழில் துறையில், இன்று ஏறத்தாழ 34,000 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் - 55,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வரவிருக்கின்றன. அதற்கான ஒப்புதல் இன்றைக்கு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் மூலம் எங்களுக்கு கிடைத்திருக்கிறது.

கேள்விக்கான பதில் - ராணிப்பேட்டையில் வருகின்ற 9-ஆம் தேதி டாடா ஜேஎல்ஆர் - எல்லோரும் சொன்னார்கள் - முதலில் வின்பாஸ்ட் வரும்போது இப்படித்தான் சொன்னார்கள். வின்பாஸ்ட் நிறுவனம் கையெழுத்திடமாட்டார்கள் - சும்மா கதை விடுகிறார்கள் என்று சொன்னார்கள். இரண்டு மாதத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது - அடுத்து, கிட்டத்தட்ட 14 மாதத்திற்குள் ஃபேக்டரிக்கான சோதனை ஓட்டம் நடந்தது. பிறகு, இறுதியாக தொழிற்சாலையை திறந்து வைத்து இன்றைக்கு வின்பாஸ்ட் நிறுவனம் இந்தியாவில் நான்காவது டாப் செல்லிங் காராக இருக்கிறது. தமிழ்நாட்டிலிருந்து செல்கின்ற இந்த வின்பாஸ்ட். இதைத்தான் டாட்டாவிற்கு வராது என்று சொன்னார்கள் - ஒன்றரை மாதத்தில், இந்த லேண்ட் சீல் செய்து, ராணிப்பேட்டையில் ஒரு கல்யாண மண்டபத்தை எடுத்து, நம்முடைய அதிகாரிகள் அங்கேயே உட்கார்ந்து இரவு-பகலாக வேலை செய்து, அந்த நிலத்தை உறுதி செய்ததால், டாட்டா ஜாகுவார் லேண்ட் ரோவர் முதலாவதாக எனக்கு தெரிந்து, ஈவி பிளஸ் லக்ஸரி செக்மெண்டில் இரண்டும் சேர்ந்து கிடைக்கின்ற ஒரு மிகப்பெரிய இன்வெஸ்ட்மென்ட். தமிழ்நாட்டின் வரலாற்றில் இது ஒரு மிகப்பெரிய ஒரு நாள் அன்று.

எனவே அன்று 9-ஆம் தேதி சந்திரசேகர் அவர்களும், நம்முடைய டாடா CEO அவர்களும், முதலமைச்சர் அவர்களும் இணைந்து இந்த டாட்டா JL ரோவார் நீங்கள் எல்லோரும் காண இருக்கிறீர்கள். ஒரு ஆட்சியில் இப்படி ரெண்டு பெரிய கார் நிறுவனங்கள் இந்த ஸ்பீடில் எப்போது வந்தது என்று நீங்கள் எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதுதான் திராவிட நாயகன், திராவிட மாடல் அரசின் வேகம். இது தொடரும்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டியின் போது குறிப்பிட்டார்.

---

# காரல்மார்க்ஸ் சிலை: முதல்வர் திறந்து வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

முதலமைச்சர் அவர்கள் கடந்த 3.4.2025 அன்று சட்டப்பேரவையில், சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், “உலகத் தொழிலாளர்களே ஒன்று கூடுங்கள்” என்ற பிரகடனத்தை, உலகத் தொழிலாளர்கள் அனைவருக்குமான ஒரே முழக்கமாக பொதுவுடைமைத் தத்துவத்தை வடித்துத் தந்தவர், இழப்பதற்கென்று எதுவுமில்லை பெறுவதற்கோ பொன்னுலகு இருக்கிறது என்ற நம்பிக்கை விதைகளை விதைத்தவர் மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்கள். வரலாற்றில் பலரும் பிறக்கிறார்கள்; பலர் வரலாற்றுக்குத் தொண்டாற்றி இருக்கிறார்கள். ஆனால், வரலாற்றின் போக்கினையே மாற்றி அமைத்தவர்கள் சிலர்தான். அந்த ஒரு சிலரில் தலைமகனாகப் போற்றப்படுபவர் கார்ல் மார்க்ஸ் அவர்கள். அத்தகைய மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களது உருவச் சிலை தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரில் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

**கார்ல் மார்க்ஸ் புகைப்படக் கண்காட்சி! முதல்வர் பார்வையிட்டார்!**

அந்த அறிவிப்பின்படி, சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகம், கன்னிமாரா பொது நூலகத்தின் வாயிலில் 85 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களின் திருவுருவச் சிலையை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்து, அச்சிலை அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். முன்னதாக, மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில் அங்கு அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியையும் பார்வையிட்டார்.

எழுத்தாளரும், மார்க்சிய சிந்தனையாளருமான பேராசிரியர் அ.மார்க்ஸ் அவர்கள் மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களுக்கு சென்னையில் சிலை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து எழுதிய கடிதத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடம் வழங்கியதன் அடிப்படையில் அவரது திருவுருவச்சிலை சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் நிறுவப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**பங்கேற்றுச் சிறப்பித்தோர்!**

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, கே.சுப்பராயன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன்,

தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், முன்னாள் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், நாகை மாலி, பிரபாகரராஜா, மு. பாபு, முகமது ஷா நவாஸ், துணை மேயர் மு.மகேஷ்குமார், இந்து குழும இயக்குநர் என். ராம், கம்யூனிஸ்ட் கட்சிகளின் நிர்வாகிகள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.